

தஞ்சாவூர் மாவட்டம் ஆடுதுறை தேர்வுநிலை பேரூராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அனைத்து கட்டமைப்புகளுடன் கூடிய கலைஞர் புதிய பேருந்து நிலையத்தினை அமைச்சர் கே.என்.நேரு திறந்து வைத்தார். உடன் அமைச்சர் முனைவர் கோவி.செழியன். மாவட்ட ஆட்சித்தலைவர் பா.பிரியங்கா பங்கஜம் எம்.எல்.ஏ.க்கள் துரை.சந்திரசேகரன், க.அன்பழகன், டி.கே.ஜி.நீலமேகம் மற்றும் செ.இராமலிங்கம் மேயர் சண்.இராமநாதன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# தஞ்சாவூர் மாவட்டம் ஆடுதுறையில் – கலைஞர் புதிய பேருந்து நிலையம்!

## அமைச்சர்கள் கே.என்.நேரு – கோவி. செழியன் திறந்து வைத்தனர்!

ஆடுதுறை, மார்ச் 25-

தஞ்சாவூர் மாவட்டம் ஆடுதுறை தேர்வுநிலை பேரூராட்சியில் கலைஞர் புதிய பேருந்து நிலையத்தினை நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர்.கோவி. செழியன் ஆகியோர் நேற்று முன்தினம் (23.03.2025) பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. பா.பிரியங்கா பங்கஜம், தலைமை வகித்தார்.

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் க.அன்பழகன் (கும்பகோணம்), துரை.சந்திரசேகரன் (திருவையாறு), டி.கே.ஜி.நீலமேகம் (தஞ்சாவூர்), தஞ்சாவூர் மாநகராட்சி மேயர் சண். இராமநாதன், கும்பகோணம் துணை மேயர் சுப.தமிழழகன், மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன், கும்பகோணம் சார் ஆட்சியர் திருமதி.ஹிருத்யா.எஸ். விஜயன், ஆடுதுறை தேர்வுநிலை பேரூராட்சி மன்றம் ம.க.ஸ்டாலின், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக நிர்வாக இயக்குநர் இரா. பொன்முடி, கும்பகோணம் மண்டலப் பொது மேலாளர் எஸ்.ஸ்ரீதரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

**அமைச்சர் கே.என்.நேரு**

இந்நிகழ்ச்சியில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு பேசியதாவது:-

முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, தஞ்சாவூர் மாவட்டம் ஆடுதுறை தேர்வுநிலை பேரூராட்சியில் 2023-2024ஆம் ஆண்டு கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூபாய் 3 கோடியே 17 இலட்சம் மதிப்பில் அனைத்து கட்டமைப்புகளுடன் கூடிய டாக்டர் கலைஞர் புதிய பேருந்து நிலையம் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் அவர்கள் மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்திட சிறப்பான திட்டப் பணிகளை இந்தியாவிற்கே முன்னோடியாக தமிழ்நாட்டில் நிறைவேற்றி வருகிறார்கள்.

முன்னாள் அமைச்சர் நினைவில் வாழ்கிற கோ. சி.மணி, முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் கும்பகோணம், ஆடுதுறை பகுதிகளில் சாலைகள், பாலங்கள், குடிநீர் வசதிகளை மேம்படுத்திட ஏராளமான திட்டப் பணிகளை நிறைவேற்றினார்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களது வழியில் நல்லாட்சி நடத்துகிற முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி மக்கள் நலன் காக்கும், மகளிர் விடியல் பயணம் போன்ற ஏராளமான திட்டப் பணிகளை சிறப்பாக நிறைவேற்றி வருகிறார்கள்.

ஆடுதுறையில் ரூ.3 கோடியே 17 இலட்சம் மதிப்பில் புதிய பேருந்து நிலையம் முத்தமிழஞர் கலைஞர் பெயரில் புதிதாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் இது போன்ற திட்டப் பணிகளை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து, முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, ஆடுதுறை கலைஞர் புதிய பேருந்து நிலைய திறப்பு விழாவில் ஏற்கெனவே இயங்கி வரும் 4 நகர வழித்தடங்களுக்கும், 6 புறநகர் வழித்தடங்களுக்கும், 10 புதிய பேருந்துகள் (BS V1) இயக்கம் மற்றும் தடம் எண்.331 புறநகர் வழித்தடத்தினை மகளிர் விடியல் பயணம் நகர பேருந்தாக (தடம் எண்.A4) எரவாஞ்சேரி, கடகம்பாடி) வழித்தடத்தில் இயக்கத்தில் புதிய பேருந்துகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர். கோவி.செழியன் ஆகியோர் கொடியசைத்து தொடங்கி வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், முன்னாள் எம்.எல்.ஏ. குத்தாலம் பி.கல்யாணம், மண்டல செயற்பொறியாளர் ஜீவாசுப்ரமணியன், பேரூராட்சிகள் உதவி இயக்குநர் மு.மாஹின் அபுபக்கர், ஆடுதுறை தேர்வு நிலை பேரூராட்சி மன்றம் துணைப் பெருந்தலைவர் திருமதி.கமலா சேகர், ஆடுதுறை தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் சீ.இராமபிரசாத், பேரூராட்சிகள் செயற்பொறியார் ப.சதீஸ்பாபு, ஆடுதுறை தொகுப்பு இளநிலை பொறியாளர் து.ரமேஷ், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் கும்பகோணம் துணை மேலாளர் தமிழ்செல்வன், கிளை மேலாளர்கள் வி. சுரேஷ், சதீஷ் குமார் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

தி.மு.க. இளைஞர் அணி சார்பில் இந்தித் திணிப்பு நிதிப் பகிர்வில் பாரபட்சம், தொகுதி மறுசீரமைப்பில் அநீதி இழைக்கும்

# ஒன்றிய மோடி அரசைக் கண்டித்து கண்டன பொதுக் கூட்ட விளக்க துண்டுப் பிரசுரம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் அறிக்கை!

நாகை, மார்ச் 25-

நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என்.கௌதமன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-



ஒன்றிய மோடி அரசு தமிழகத்தை வஞ்சிக்கும் வகையில் மும்மொழிக் கொள்கை என்ற பெயரில் மண்தோன்றிய காலத்தின் உலக மூத்த மொழியாம் தமிழ் மொழிக்கு எதிராக கட்டாயம் இந்தித் திணிப்பு, தமிழ்நாட்டில் இருந்து வரியாக அதி நிதி பெற்று தமிழகத்திற்கு சொற்ப தொகையை விடுவித்தும், கல்வி நிதியை தர மறுத்து நிதிப் பகிர்வில் பாரபட்சமும், மக்கள் தொகையை கட்டுப்படுத்துவதில் வெற்றிக் கண்ட தமிழகம் உள்ளிட்ட தென்மாநிலங்களை வஞ்சிக்கும் வகையில் நாடாளுமன்ற தொகுதி மறுசீரமைப்பு என்ற பெயரில் தமிழகத்தின் நாடாளுமன்ற தொகுதியை குறைக்கும் தொகுதி மறுசீரமைப்பில் அநீதி இழைக்கும் ஒன்றிய பா.ஜ.க பாசிச ஆட்சியைக் கண்டித்து நாகை மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் 23ம் தேதி நாகை தொகுதிக்கு நாகையில் கண்டனப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அதைத் தொடாந்து கீழ்வேளூர் சட்டமன்றத் தொகுதிக்கு வரும் 26ம் தேதி புதன் கிழமை திருக்குவளை கடைத்தெருவில் நடைபெற உள்ள கண்டன பொது கூட்டத்தில் ஊடகவியலாளர்

மதுரைபாலா, கழக இளம் பேச்சாளர் ப.அருண் குமார். ஆகியோர் சிறப்புரையாற்றுகிறார்கள். அதைத் தொடர்ந்து வரும் 29.3.2025 சனிக்கிழமை வேதாரண்யம் தொகுதியில் வேதாரண்யத்தில் நடைபெற உள்ள கண்டனப் பொதுக் கூட்டத்தில் ஊடகவியலாளர் ராஜகம்பீரன் அப்பாஸ், கழக இளம் பேச்சாளர் ரா.அகிலா ஆகியோர் சிறப்புரையாற்றுகிறார்கள்.

கூட்டத்தில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக் க்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள்,நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகி கள், உள்ளாட்சி அமைப்புகளின் முன்னாள் பிரதிநிதிகள், நகர் மன்ற, பேரூராட்சி மன்ற தலைவர்கள், துணைத்தலைவர்கள், உறுப்பினர்கள், கிளை, வார்டு கழக நிர்வாகிகள் கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக் கொள்கிறேன். கூட்ட ஏற்பாடுகளை இளைஞர் அணியின் ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகளின் ஆலோசனையின்படி சிறப்பாக செய்திட வேண்டும்.

இவ்வாறு தனது அறிக்கையில் நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என். கௌதமன் கூறியுள்ளார்.



கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்தநாளை முன்னிட்டு அரூர் நகரக் கழகச் செயலாளர் முல்லை ரவி தலைமையில் அரூர் பேருந்து நிலையத்தில் பொதுமக்களின் தாகம் தணிக்கும் வகையில் தண்ணீர் பந்தலை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் பி.பழனியப்பன் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் இதில் பேரூராட்சி துணைத்தலைவர் சூர்யாதனபால், பேரூர்க் கழக துணைச் செயலாளர் செல்வதயாளன், ஒன்றிய பிரதிநிதி மதியழகன் உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாநகராட்சிக்கு உட்பட்ட காரப்பாரை பகுதியில் மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத் துறை மற்றும் ஈரோடு மாநகராட்சி சார்பில் கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம் சிறப்பு மருத்துவ முகாமினை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி துவக்கி வைத்து மக்களை தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் மருந்துப் பெட்டகங்களை வழங்கினார். நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜகோபால் சுன்கரா, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், மேயர் நாகரத்தினம், துணை மேயர் வி.செல்வராஜ் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# வளர்ந்து வருகின்ற நகரப் பகுதிகளில் மினி பேருந்துகள் இயக்கிட நடவடிக்கை!

## சட்டப்பேரவையில் – அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் அறிவிப்பு!

**சென்னை, மார்ச் 25-**

**சட்டப்பேரவையில் உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்த அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர், வளர்ந்து வருகின்ற நகரப் பகுதிகளில் மினிப் பேருந்துகள் இயக்கிட நடவடிக்கை எடுக்கப்படும் என்று குறிப்பிட்டார்.**



இது குறித்து பேரவையில் நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**சேவூர் எஸ். இராமச்சந்திரன்:**

(அ) ஆரணியிலிருந்து மதுரைக்கு புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர்:** ஆரணியிலிருந்து மதுரைக்கு புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க வேண்டும் என்று உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார். புதிய வழித்தடம் உருவாக்க வேண்டும் என்பதால், அதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. ஏற்கெனவே, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக தடம் எண் 985UD என்ற பேருந்து, திருப்பதியிலிருந்து தூத்துக்குடிக்கு ஆரணி-மதுரை வழியாக ஒரு பேருந்து செல்கிறது. அந்தப் பேருந்திற்கு ஆரணிக்கும் stage உண்டு. முன்பதிவு செய்து கொள்ளும் வசதியும் உண்டு. எனவே, தேவைப்படுகின்ற பயணிகள் முன்பதிவு செய்தும் அந்தப் பேருந்தில் பயணித்துக்கொள்ளலாம் என்று அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

உறுப்பினர் அவர்கள் மதுரையை மாத்திரம் சொல்லவில்லை. திருச்செந்தூர், தூத்துக்குடி, திருச்சி, ஸ்ரீரங்கம் என்று பல்வேறு ஊர்களை சொல்கிறார். எனவே, எல்லா ஊர்களுக்கும் பேருந்து வசதி செய்து கொடுப்பது என்பது சாத்தியமில்லை. இன்னொன்று, ஆரணியிலிருந்து தமிழ்நாட்டின் மத்திய பகுதியாக இருக்கின்ற திருச்சிக்கு இரண்டு பேருந்துகள் இயக்கப்படுகின்றன. அந்த பேருந்துகளைப் பயன்படுத்தி சென்றால், அங்கிருந்தே மதுரைக்கு செல்வதற்கு எந்த நேரத்திலும் பேருந்துகள் இருக்கிறது. அதேபோல, பக்கத்தில் செய்யாறிலிருந்து திருச்சிக்கு பேருந்துகள் இயக்கப்படுகிறது. ஆரணியிலிருந்து 20 நிமிட பயண தூரத்தில் திருவண்ணாமலை இருக்கிறது. திருவண்ணா மலையிலிருந்து 5 பேருந்துகள் மதுரைக்கு 10 நடைகள் சென்று வருகின்றன. எனவே, அவருடைய ஊருக்கு பக்கத்திலிருக்கின்ற இந்த வசதிகளைப் பயன்படுத்தி எளிதாகப் பயணம் செய்யலாம் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**சேவூர் எஸ். இராமச்சந்திரன்:** ஆரணி நகரத்திலிருந்து சென்னைக்கு நேரடியாக விரைவுப் பேருந்தை இயக்குமாறு தங்கள் மூலமாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், ஆரணி நகரத்தில் ஏற்கெனவே இரண்டு குளிர்சாதனப் பேருந்துகள் இயக்கப்பட்டு வந்தன. தற்போது அதில் ஒன்று நிறுத்தப்பட்டுள்ளது. நிறுத்தப்பட்ட அந்த குளிர்சாதனப் பேருந்தை மீண்டும் இயக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர்:** சாலைகள் சுற்றி வளைந்திருந்தால் பேருந்துகளும் சுற்றி வளைந்து செல்ல வேண்டிய சூழல் ஏற்படுகிறது. உறுப்பினர் அவர்களுடைய சென்னைக்கு நேரடியாக பேருந்து வேண்டுமென்ற அந்தக் கோரிக்கையைப் பரிசீலித்து, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**செ. ஸ்டாலின் குமார்:** என்னுடைய துறையூர் தொகுதியில் அம்மாபட்டி, காளிபட்டி, சிங்களாந்தபுரம், ஈச்சம்பட்டி, பெத்துபட்டி, மருக்களாம்பட்டி, நல்லியம்பட்டி, தவிட்டுபட்டி, கட்டணாம்பட்டி, ஆதனூர், கீரிப்பட்டி, பொன்னம்பலபட்டி, வேலாயுதம்பாளையம், ஐயம்பாளையம், குருவம்பட்டி, வீரமச்சான்பட்டி, சொக்கநாதபுரம், காவேரிபட்டி, நாகமநாயக்கன்பட்டி, பூனாட்சி, கரட்டூர், கருப்பம்பட்டி, ஒட்டம்பட்டி, ஒட்டம்பட்டிபுதூர், வெங்கடேசபுரம், கலிங்கமூடையான்பட்டி, சேனப்பநல்லூர், சேனப்பநல்லூர் புதூர், மெய்யப்பம்பட்டி, வைகரை, கங்கானிபட்டி, கொட்டையூர், கொல்லபட்டி, திருமானூர், எஸ்.என்.புதூர், கட்டப்பள்ளி, பாலகிருஷ்ணம்பட்டி, காஞ்சேரிமலை, காஞ்சேரிமலை புதூர் ஆகிய பகுதிகளுக்கு பெண்கள் பொருளாதாரத்தில் வளர்ச்சி பெறவும், அவர்கள் வாழ்வில் ஒளியேற்றவும் முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்த மகத்தான திட்டம் "விடியல் பயணம்" திட்டம். இந்தத் திட்டத்தின் மூலம் எனது தொகுதியிலுள்ள, இந்தப் பகுதிகளிலுள்ள மகளிர் விடியல் பயணம் செய்வதற்கு புதிய வழித்தடத்தில் பேருந்துகளை போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இயக்க முன்வருவார்களா என்பதைக் கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர்:** உறுப்பினர் ஸ்டாலின் குமார் அவர்கள் ஏற்கெனவே அவருடைய தொகுதியில் விடியல் பயணத் திட்டப் பேருந்துகள் இல்லாத பகுதி இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார். என்னையும் ஆய்வு செய்வதற்கு அழைத்திருக்கிறார். விரைவிலே வந்து, ஆய்வு செய்து, அவை உண்மையாக இருக்கும்பட்சத்தில் எல்லாப் பட்டிகளுக்கும், எல்லா பாளையங்களுக்கும் பேருந்துகளை இயக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**க.சுந்தர்:** நம்முடைய முதல்வர் அவர்கள் வழங்கியிருக்கின்ற அந்த விடியல் பயணம் மகளிரிடையே பரவலான வரவேற்பைப் பெற்றிருக்கிறது. எனவே, மேலும் அந்தத் திட்டம் அனைத்து கிராமங்களை யும் சென்றடைகின்ற வகையில், ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் 2 வழித்தடங்களை இந்த அரசு வழங்குமா என்பதை போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்க விரும்புகிறேன்.

**புதிய நகர வழித்தடம்!**

**அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர்:** திராவிட மாடல் முதல்வர் அவர்கள், புதிய பேருந்துகள் வாங்குவதற்கு உத்தரவிட்டு, படிப்படியாக அவை வந்து கொண்டிருப்பதை உறுப்பினர் சுந்தர் அவர்களும் அறிவார்கள். ஏற்கெனவே கடந்த நிதியாண்டுகளில் 2 ஆயிரம் பேருந்துகள் புழக்கத்திற்கு வந்து விட்டன. தற்போது வரை 3,300 பேருந்துகள் புழக்கத்தி ற்கு வந்திருக்கின்றன. இந்தப் பேருந்துகளெல்லாம் 14, 15 ஆண்டுகளாக இயக்கப்பட்டு வருகின்ற பழைய பேருந்துகளை மாற்றி, புதிய பேருந்துகளாக விடுவதற்காக பயன்படுத்தப்பட்டு வருகின்றன. பழைய பேருந்துகள், புதிய பேருந்துகளாக மாற்றப்பட்ட பின்னர், உறுப்பினர் அவர்களின் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படும். ஏற்கெனவே உறுப்பினர் சுந்தர் அவர்களின் தொகுதியான உத்திரமேரூருக்கு ஒரு புதிய mofussil வழித்தடம் வழங்கப்பட்டிருக்கிறது. புதிய நகர வழித்தடம் வழங்குவதற்கும் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**க.கார்த்திகேயன்:** எனது ரிஷிவந்தியம் தொகுதிக்குட்பட்ட, வானாபுரத்தை மையமாகக் கொண்டு கழக ஆட்சியில் புதிய வட்டாட்சியர் அலுவலகம் தொடங்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது. எனவே, அந்தப் பகுதியில் உள்ள எல்.என். பட்டி, ரிஷிவந்தியம், மேலந்தல், மணலூர்பேட்டை பகுதிகளிலுள்ள பொதுமக்கள் வானாபுரம் வழியாக கள்ளக்குறிச்சி செல்வதற்கு புதிய பேருந்துகள் இயக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர்:** உறுப்பினர் கார்த்திகேயன் அவர்கள் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுடைய செல்லப்பிள்ளை. ஏற்கெனவே, பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் அந்த மாவட்டத்திற்கான பொறுப்பு அமைச்சராக இருக்கின்ற காரணத்தினால், இதுகுறித்து அவரும் எடுத்துக் கூறியிருக்கி றார்கள். புதிதாக ஏற்படுத்தப்பட்ட வட்டாட்சியர் அலுவலகப் பகுதிக்கு இணைப்புப் பேருந்து வேண்டுமென்று கேட்டிருக்கின்றார். அது குறித்து நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

**வி.பி. நாகைமாலி:** எனது கீழ்வேளூர் தொகுதி நாகப்பட்டினத்திலிருந்து ஆந்தக்குடி என்கிற கிராமத்திற்கு தடம் எண் 19 நகரப் பேருந்து சென்று கொண்டிருக்கிறது. அந்தப் பேருந்து மிகவும் பழுதடைந்து மோசமாக இருக்கின்றது. அந்தப் பேருந்தில் கணிசமான பயணிகள் பயணம் செய்கின்றனர். ஆகவே, அந்தப் பேருந்தை மாற்றி விட்டு, ஒரு புதிய பேருந்து அந்தத் தடத்தில் செல்வதற்கு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை கேட்டு அமர்கிறேன்.

**பழைய பேருந்துகள் மாற்றியமைப்பு!**

**அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர்:** புதிய பேருந்துகள் கூடுகட்டி வந்து கொண்டிருக்கின்றன. நமது திராவிட மாடல் முதல்வர் அவர்கள் கடந்த மாதம் நாகப்பட்டினத்திற்குச் சென்றபோது, 105 பேருந்துகளை கொடியசைத்து துவக்கி வைத்தார்கள். இது உறுப்பினர் அவர்களுக்கும் தெரியும். அத்தனையும் ஏற்கெனவே உள்ள வழித்தடங்களில் இயங்குகின்ற பழைய பேருந்துகளை மாற்றியமைப்பதற்காக விடப்பட்டுள்ளன. உறுப்பினர் முகம்மது ஷாநவாஸ் அவர்கள் சிரிக்கிறார்கள். பூஞ்சோலை கிரா மத்திற்கு அன்றைய தினம் பேருந்து இயக்கப்பட்டது என்பதையும் நான் நினைவில் வைத்திருக்கிறேன். எனவே, இந்தப் பேருந்தும் விரைவில் மாற்றியமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**இ. கருணாநிதி:** பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி, தாம்பரம் சட்டமன்றத் தொகுதிகள் அடங்கிய சென்னை புறநகரிலுள்ள தாம்பரம் மாநகராட்சி வளர்ந்துவரும் பகுதியாகும். இங்கே தேசிய நெடுஞ்சாலை மற்றும் மாநில நெடுஞ்சாலைகளில் தான் போக்குவரத்துத் துறை பேருந்துகள் செல்கின்றன. ஆனால், மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பிரதான சாலைகளில் மினி பேருந்துகள் இயக்கப்படுவது குறைவாகவே இருக்கிறது. எனவே, மினி பேருந்துகள் அதிகளவில் இயக்கப்பட வேண்டுமென்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் ஏற்கெனவே கோரிக்கை வைத்திருக்கிறேன். ஆகவே, புதிதாக மினி பேருந்துகள் இயக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர்:** வளர்ந்து வருகின்ற நகரப் பகுதிகளில் சில இடங்களில் சாலைகள் மிகவும் குறுகலாக இருந்தபோதிலும், மினி பேருந்துகள் விட வேண்டுமென்ற கோரிக்கைகள் தொடர்ந்து வந்துகொண்டிருக்கின்றன. இன்னும் சொல்லப்போனால், மினி பேருந்துகளைவிட, சிறிய இரக வாகனங்களை இயக்கினால் கூட அந்தப் பகுதி மக்களுக்கு பயனுள்ளதாக இருக்கும் என்கின்ற ஆலோசனையும் வந்துகொண்டிருக்கிறது. நிச்சயமாக அவைகுறித்து ஆலோசித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**பொன். ஜெயசீலன்:** கடந்த 2, 3 நாட்களாக பேரவைக் கூட்டம் அதிக நேரம் நடைபெற்றது. 19 ஆம் தேதி பிற்பகல் 4 மணி வரை பேரவைக் கூட்டம் நடைபெற்றது. நேற்றைய தினம் பிற்பகல் 3 மணி வரை நடைபெற்றது. இங்குள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் வெளியில் செல்லும்போது. . . சட்டமன்ற உறுப் பினர்களுக்கான பேருந்து எல்லோரும் சென்ற பின்பு, நாங்கள் அரை மணி நேரம் அவைக்கு வெளியில் வெயிலில் காத்திருக்க வேண்டிய நிலை இருக்கிறது. அதனால், அவை முடியும் நேரத்தில் 2 நிமிடங்களுக்கு முன்பு அங்கு பேருந்துகளை நிறுத்தி னால் நாங்கள் உடனே செல்ல வசதியாக இருக்கும். ஏனெனில் கார் இருப்பவர்கள் சென்று விடுகிறார்கள். ஆனால், நாங்கள் அரை மணி நேரமாக வெயிலில் நிற்கிறோம். கருணையோடு இதனைப் பரிசீலிக்குமாறு அன்போடுகேட்டுக்கொள்கின்றேன்.

**அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர்:** பேரவை முடிகின்ற நேரத்திலே எல்லா கார்களும் ஒரே நேரத்தில் வெளியே செல்வதற்கு முனைகின்ற காரணத்தினால், பேருந்து வருவதற்கு தாமதமாகியிருக்கும். இன்றைக்கு நானே வந்து நின்று பேருந்தை முன்கூட்டியே நிறுத்துவதற்கான நடவடிக்கையை எடுக்கிறேன் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**ரூபி ஆர். மனோகரன்:** களக்காடு நகராட்சி புதியதாக அமைக்கப்பட்ட நகராட்சி. அதனுடைய மக்கள்தொகையைக் கருத்தில்கொண்டு கூடுதலாக களக்காட்டிலிருந்து, நாங்குநேரி வழியாக திருநெல் வேலிக்குப் பேருந்துகள் இயக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர்:** ரூபி ஆர். மனோகரன் அவர்கள் ஏற்கெனவே கொடுத்த கோரிக்கைகள் பல நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதேபோல, இந்தக் கோரிக்கையும் நிறைவேற்றப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.